பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 09 சனிக்கிழமை 24.12.2022 கதிர் 300

## அடையாளம் தெரியாத 2 ஆண்களின் சடலங்கள்

வெவ்வேறு இடங்களில் அடையாளம் தெரியாத இரண்டு சடலங்கள் கண்டெ டுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் இன்று தெரிவித்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மகாவலி ஆற்றில் 2

# பயங்கரவாதத் தடைச் சட்டம் ஜனவரி 31 இற்கு முன் 'அவுட்'

## நீதி அமைச்சர் விஜயதாஸ உறுதி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்து தேசிய பாதுகாப்புச் சட்டமூலத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன்.

–இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். 8



## பதவி இழக்கும் டயானா? புதிய பெண் எம்.பி. யார்?



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குள் காலடி எடுத்துவைத்து, பின்னர் குத்துக்கரணம் அடித்து இராஜாங்க அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்ட டயானா கமகேயின் அரசியல் இருப்பு ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் 2

## மூதூரில் பட்டினியால் வாடிய சிறுவன் பரிதாபமாக மரணம்

### வெள்ளத்தில் மிதக்கின்றது வீடு





மிகக் கொடிய வறுமையால் பட்டினியால் வாடிய சிறுவன் போக்கு இன்மையால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். இந்தத் தகவலை அந்தப் பகுதியின் சுகாதார தரப்பினர் உறுதி செய்துள்ளனர்.

மூதூர் – 64ஆம் கட்டை – சகாயபுரம் கிராமத்தில் உள்ள மாணிக்கவிநாயகர் ஆலயத்துக்குப் 2

## குட்டித் தேர்தல் ஆட்டத்தை ஆரம்பித்தது இ.தொ.கா.

### வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் போட்டியிட விருப்பமுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் 2

## கழுத்து நெரித்து வணிகர் கொலை

முல்லைத்தீவு, முள்ளியவளை – நீராவிப்பிட்டிப் பகுதியில் சிறு வியாபார வணிக நிலையம் நடத்திவந்த வணிகர் ஒருவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

68 வயதான அமிர்தலிங்கம் தனபாலசிங்கம் என்ற நபரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார் என்று முல்லைத்தீவு பொலிஸார் இன்று தெரிவித்தனர். 2

## புடவைத் தொட்டிலில் கழுத்து இறுகிய நிலையில்12 வயது சிறுவனின் சடலம்

புடவைத் தொட்டிலில் கழுத்து இறுகிய நிலையில் 12 வயது சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஹப்புத்தளை – பிடரத்மலை தோட்டப் பகுதியிலுள்ள வீடொன்றில் அமைக்கப்பட்டிருந்த புடவைத் தொட்டிலில் கழுத்து சிக்கிய நிலையிலேயேகுறித்தசிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் இன்று தெரிவித்துள்ளனர். 2



## இலங்கையை ஊடறுக்கின்றது தாழமுக்கம்

### வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை



இரண்டு நாள்களுக்கு முன்னர் வங்காள விரிகுடாவில் இலங்கையின் நிலப்பரப்பை விட்டு வடக்கு திசையில் விலகிப்போன தாழ்வு நிலை, தாழ்வு மண்டலமாக மாறி மீண்டும் கடலில் இருந்து தெற்கு, தென்மேற்கு திசையில் இலங்கையை ஊடறுத்துப் பயணிக்கக் கூடிய வகையில் தனது நகர்வை ஆரம்பித்துள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:– 2

## ஒரு கிலோ கேக்கின் விலை 1,500 ரூபாவாக அதிகரிப்பு



பண்டிகைக் காலத்தில் ஒரு கிலோ கேக்கின் விலை 1,500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் தலைவர் 2

## புடைவைத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது இரண்டு குழந்தைகளை உறங்க வைப்பதற்காக வேறு அறைக்கு அழைத்துச் சென்ற தாய், திரும்பி வந்து பார்த்த போது, 12 வயது மகன் தொட்டில் கட்டப்பட்டிருந்த புடவையில் கழுத்து இறுகிய நிலையில் கிடந்ததைக் கண்டுள்ளார்.

எனினும், சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவனின் சடலம் மீது பிரேத பரிசோதனை நடத்தப்பட்டதில், கழுத்து இறுகியதால் உயிரிழப்பு ஏற்பட்டது எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஹப்புத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அடையாளம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

60 - 70 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

சடலம் கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மீரிகம – ஹொரகெலே வனப்பகுதியில் அடையாளம் தெரியாத மற்றுமொரு ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மீரிகம பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

## ஒரு கிலோ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்.கே. ஜயவர்தன தெரிவிக்கையில்,

முட்டையின் விலை அதிகரிப்பு மற்றும் தற்போதுள்ள முட்டைத் தட்டுப்பாடு காரணமாக கேக்கின் விலை அதிகரித்துள்ளது.

இதேவேளை, விலை உயர்வால், பண்டிகைக் காலங்களில் கேக்கின் தேவையும் 25 சத வீதம் குறைந்துள்ளது – என்றார்.

## இலங்கையை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயரமுத்தம் யாழ்ப்பாணக் கடல் எல்லைவரை நீடிப்பதால், அம்பாறைக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் பெரும்பாலும் திருகோணமலை வழியே நாளை ஞாயிறன்று கரையைக்கடந்து மத்திய இலங்கை ஊடாக மேற்கிலே அரபிக் கடலில் சென்று பயணிக்கும்.

இதன் காரணமாக இன்று சனிக்கிழமை வடக்கு, கிழக்கில் மேகமூட்டமாக இருக்கும். சில இடங்களில் தூறலும் சாதாரண மழையும் காணப்படும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் முதல் திங்கள் காலை வரை வடக்கு, கிழக்கில் பரவலாக குறிப்பிடத்தக்க மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

தாழமுக்கம் இலங்கையை ஊடறுத்து பயணிக்கும்போது, மேகக்குவிப்பு மலையகம், கொழும்பை அண்டிய பகுதிகளை நோக்கியே அமைய வாய்ப்புள்ளது. இதனால் மேல் மாகாணம், மத்திய மாகாணம், வட மத்திய மாகாணம், ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் கன மழை முதல் மிக கனமழை வரையான அதீத மழைவீழ்ச்சி சில மணிநேரங்களிலேயே பதிவாகும் வாய்ப்புள்ளது.

மலையகத்தில் சில இடங்களில் மண் சரிவு அனர்த்தங்கள் ஏற்படவும் ஏதுவான நிலை காணப்படுகின்றது. ஆபத்தான மலைப் பிரதேசங்களில் வாழும் மக்கள் அவதானத்துடன் செயற்படுவது நல்லது – என்றுள்ளது.

## கழுத்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த வணிகர் அவரது கடைக்குள் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர், கழுத்து நெரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று மாவட்ட மருத்துவமனையின் சட்டமருத்துவ அதிகாரியின் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தடயவியல் பொலிஸாரும் வணிக நிலையத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மூதூரில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்புறமாகவுள்ள வீதியில் குடியிருக்கும் வைரமுத்து ராமராஜன் என்ற சிறுவனே பட்டினியின் கொடுமையால் உயிரிழந்தார்.

குறித்த சிறுவன் தந்தையை இழந்து தாயுடன் வாழ்ந்து வந்தார்.

இது தொடர்பான தகவல்களை மூதூர், பாரதிபுரம் – கிளிவெட்டியில் உள்ள மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் சமூக ஊடகங்கள் ஊடாக வெளியிட்டுள்ளனர்.

சிறுவனின் தற்காலிக வீட்டில் உள்ளேயும் வெளியேயும் மழை வெள்ள நீர் தேங்கி நின்றது. இனிமேலாவது பட்டினியில் இருக்கின்ற சிறுவர்களைப் பாதுகாக்க அரச மற்றும் அரச சார்பற்ற அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டும். சகாயபுரம் கிராமம் போன்று பல கிராமங்களில் வறுமையின் கோரப் பிடியில் சிக்கி பெருமளவு மக்கள் கவனிப்பாரற்று உள்ளனர். அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் – என்று மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கம் சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

## பதவி இழக்கும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பதற்கு அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் ஊடாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டைப் பயன்படுத்தி, டயானா கமகேவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. அவர் இலங்கைப் பிரஜை அல்லர் என முறைப்பாட்டாளர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு இன்னும் வெளியாகாத போதிலும், டயானாவுக்கு எதிராகவே தீர்ப்பு வரும் என்று ஐக்கிய மக்கள் சக்தி நம்புகின்றது.

இந்நிலையில் டயானாவின் இடத்துக்கு யாரை நியமிப்பது என்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்துள்ளது. பெண் பிரதிநிதி ஒருவருக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த வாய்ப்பை ஏற்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தக் கோரிக்கையை அவர் நிராகரித்துள்ளார். மக்கள் ஆசியுடனேயே தான் சபைக்கு வருவார் எனக் கூறியுள்ளார்.

எனவே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திராணி பண்டாரவை தேசியப் பட்டியல் ஊடாக சபைக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

## குட்டித் தேர்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் இ.தொ.காவில் போட்டியிட விருப்பமுடையவர்கள் தமது விண்ணப்பங்களைச் சுயவிபரங்களை உள்ளடக்கி, போட்டியிட விரும்பும் உள்ளூராட்சி சபையின் பெயர், உள்ளூராட்சி சபையின் எல்லைக் குட்பட்ட போட்டியிட விரும்பும் வட்டாரத்தையும் குறிப்பிட்டு – எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஜனவரி 10ஆம் திகதிக்கு இடையில் இ.தொ.கா. தேர்தல் பிரிவு கணக்காளர், இலக்கம் 72, சௌமியபவான், ஆனந்த குமாரசாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் பதிவு செய்யுமாறு இ.தொ.கா. அறிவித்துள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசுக்குத் திராணி உண்டா?

நாட்டின் சட்டங்கள் தொடர்பாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ முக்கியமான இரண்டு தகவல்களை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஒன்று – பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக ரத்து செய்து, தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்ற ஒன்றை வரும் ஜனவரி 31க்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளமை.

அடுத்தது – தென்கொரியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டமை போன்று உண்மைகளைக் கண்டறியும் ஆணைக் குழுவை ஸ்தாபிக்கும் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் கூறியிருக்கின்றமை.

கடந்த 45 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் கொடூரப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்காக, முன்னர் பிரேரிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கைவிடப்பட்டு, மாற்றாக தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்று புதிதாக ஒன்றைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக இப்போது தெரிகிறது.

புதிய தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் உள்ளடக்க அம்சங்களை நோக்கினால்தான் தற்போது நடைமுறையில் உள்ள மிக மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்திலும் விட அது மோசமானதா அல்லது இது மோசமானதா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

அடுத்து, உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவை நியமிப்பதற்கு வழி செய்யும் சட்டமூலம் குறித்தும் நீதி அமைச்சர் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

இது விடயத்தில் 'மனம் இருந்தால்தான் இடம் உண்டு.' யுத்த காலத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் செய்ய வேண்டும் என்ற நீதி முறையான எண்ணம், அதிகாரத் தரப்புக்கு இருந்தால் மட்டுமே இந்த விடயம் பிரயோசனமானதாக அமையும்.

உண்மைகளை மூடி மறைப்பதற்கான மற்றொரு எத்தனமாக இது கட்டவிழும் என்றால் இதனைப் போல நல்லிணக்கத்துக்கு பேரனர்த்தம் தரும் விடயம் வேறு எதுவும் இருக்கப் போவதில்லை.

நல்லிணக்கம், புரிந்துணர்வு, இன சௌஜன்யம் போன்றவற்றின் மீது அமைதியும் சமாதானமும் கட்டி எழுப்பப்பட வேண்டுமாயின், அதற்கு கடந்த கால உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். உண்மைகளை மூடி மறைத்து, நீதிக்கும் நியாயத்திற்கும் கதவடைத்து, நல்லிணக்கத்தைக் கொண்டு வந்து விட முடியாது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கான சட்டமூலம் பற்றி அறிவிக்கும் அரசு, முதலில் உண்மைகளைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தும் திராணி – முதுகெலும்பு – திட சங்கற்பம் தனக்கு உண்டா என்பதை வெளிப்படுத்துவது நல்லது.

# மலையகத் தமிழர்களின் அரசியல்சார் பிரச்சினைகளை தீர்க்க ஆணைக்குழு!

## கணபதி கனகராஜ் ஆலோசனை



மலையக தமிழர்களின் அரசியல் சார் பிரச்சினைகளை தீர்க்க ஆணைக் குழுவொன்றை அமைக்குமாறு இ.தொ.காவின் பிரதித் தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான கணபதி கனகராஜ் யோசனையொன்றை முன்வைத்துள்ளார்.

ஹற்றனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

மலையகம் தொடர்பாக ஆணைக் குழுவொன்றை அமைத்து, அந்த ஆணைக்குழுவால் முன் வைக்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் மலையகத் தமிழர்களின் அரசியல்சார் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் தேசிய நீரோட்டத்தில் எமது மக்களும் இணையக்கூடும். தமது பதவி காலம் முடிவடைவதற்குள் ஜனாதிபதி இதனைச் செய்ய வேண்டும். அதை செய்வார் என நம்புகின்றோம்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பூர்வாங்கப் பணிகளை தேர்தல் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது. கூட்டாகவும், தனித்தும் தேர்தல்களை எதிர்கொண்ட அனுபவம் காங்கிரஸுக்கு உள்ளது.

எனவே, நேர காலத்துக்கு ஏற்ற வகையில் தேர்தல் சம்பந்தமாக எமது கட்சியின் தேசிய சபைக்கூடி முடிவை எடுக்கும்' என கூறினார்.

# போதைப் பொருள் பாவனைத் தடுப்பு; விழிப்புணர்வுத் திரைப்படம் வெளியீடு





(இரா.ரஜீந்திரமூர்த்தி)

பிறிமன் இயக்கத்தில் உருவான 'அனல்' என்ற 95 நிமிட முழுநீளத் திரைப்படம் நேற்று மாலை திருகோணமலை நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மாணவர்களை இலக்குவைத்து அவர்களை போதைப் பொருள்களுக்கு அடிமையாக்கும் நாசகார சக்திகளிடமிருந்து மாணவர்களை பாதுகாக்கும் நோக்குடன் இப்படத்தின் திரைக்கதை உருவாக்கப்பட்டிருப்பது முக்கியத்துவம் பொறுகின்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தமிழரசுக்கட்சியின் தலைவர் ச. குகதாசன், திரைப்பட இயக்குனர் பிறிமன், ஊடகவியலாளர்கள், அதிபர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இப்படம் நேற்று திரையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நீரில் மூழ்கி சிறுமி சாவு

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாமரைக்கேணியில் நேற்று மாலை ஏனைய சிறுவர்கள் பலருடன் நீராடிக் கொண்டிருந்த சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி மர ணமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் தக்வா பள்ளி வீதியைச் சேர்ந்த மர்சூக் பாத்திமா றினா என்பவரே உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப் பட்டுள்ளார்.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சிறுமியின் உடலை திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் சென்று பார்வையிட்டு, சடலத்தை பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸாருக்கு கட்டளை பிறப்பித்தார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் போட்டியில் சற்குணம் தெரிவானார்!



மட்டக்களப்பு– மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையின் தவிசாளருக்கான போட்டியில், ஓந்தாச்சிமடம் வட்டார உறுப்பினர் சற்குணம் தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையின் தவிசாளர் ஞா.யோகநாதன் அண்மையில் சுகவீனம் காரணமாக உயிரிழந்த நிலையில், நேற்று (வெள்ளிக்கிழமை) புதிய தவிசாளர் தெரிவு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மணிவண்ணன், மட்டக்களப்பு மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பிரகாஸ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் தெரிவுக்கு வேட்பாளர்கள் கோரப்பட்ட நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் இரண்டு உறுப்பினர்கள் போட்டிக்கு அறிவித்தனர். இந்தப் போட்டியில், களுவாஞ்சிகுடி வட்டாரத்தில் ஓந்தாச்சிமடத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சற்குணமும் களுவாஞ்சிகுடியை பிரதிநிதித்துவப்படுத்தும் வினோராஜும் போட்டியிட்டனர்.

இதனடிப்படையில் நடைபெற்ற திறந்த வாக்கு அடிப்படையில் சற்குணம் 10 வாக்குகளும் வினோராஜ் 8 வாக்குகளும் பெற்ற நிலையில் மேலதிக இரண்டு வாக்கால் சற்குணம் தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் நடுநிலை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய முதியோர் இல்லத்தில் தீ 20 வயோதிபர்கள் கருகிச் சாவு



ரஷ்யா, கெமரோவோவில் உள்ள சைபீரியா நகரில் பதிவு செய்யப்படாத முதியோர் இல்லத்தில் நேற்று திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

அனைவரும் முதியவர்கள் என்பதால், கட்டடத்திற்குள் சிக்கியவர்கள் வெளியில் வர முடியாமல் அவதிப்பட்டுள்ளனர். அதற்குள் தீ மளமளவென பரவியுள்ளது. இதுகுறித்து தகவல் அறிந்து விரைந்த தீயணைப்பு வீரர்கள், கட்டிடத்தின் இரண்டாம் தளம் முழுவதும் எரிந்த தீயை கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டனர். மேலும், கட்டடத்திற்குள் சிக்கியர்களை மீட்கும் பணியிலும் ஈடுபட்டனர். இந்நிலையில் தீ விபத்தில் சிக்கி இதுவரை 20 பேரின் உடல் சடலமாக மீட்கப்பட்டுள்ளன்ச் தகவல் வெளியாகி உள்ளது.

ரஷ்யா முழுவதும் முதியோருக்கான பல முதியோர் இல்லங்கள் பதிவு செய்யாமல் இயங்கி வருகின்றன எனவும், அதிகாரப்பூர்வமாக அவை தனிப்பட்ட சொத்தாக கருதப்படுவதால் ஆய்வுக்கு உட்படுத்த முடியாது எனவும் அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளன.

## அமெரிக்காவில் குளிர்கால சூறாவளியால் முழு இருளில் மூழ்கின 15 லட்சம் வீடுகள்

### 20 கோடி பேருக்கு எச்சரிக்கை அறிவிப்பு



அமெரிக்காவில் கொதிக்கும் நீரை உயரே வீசி பனிக்கட்டி ஆக்கும் சவாலில் வெற்றி பெறும் வகையிலான கடுங்குளிரால் 20 கோடி பேருக்கு எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

வொஷிங்டன்,டிச.24

அமெரிக்காவில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்கு மக்கள் தயாராகி வந்த சூழலில், கடும் குளிர் அதற்கு எதிராக திரும்பியுள்ளது. திடீரென உருவான வெடிகுண்டு சூறாவளி எனப்படும் குளிர்கால புயலால் நேற்று 15 லட்சம் பேருக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டு அவர்கள் இருளில் மூழ்கி கிடந்தனர்.

இந்த வெடிகுண்டு சூறாவளி என்பது கனமழை அல்லது கடும் பனியை தோற்றுவிக்க கூடியது. கடற்கரை பகுதிகளில் வெள்ளம் ஏற்படுத்துவதுடன், சூறாவளி காற்றையும் வீச செய்யும். சில நீர்நிலைகளில் இதனால், பல அடி உயரத்திற்கு அலைகளும் எழுந்து காணப்பட்டன. குளிர்கால சூறாவளியால் நாடு முழுவதும் பனிபடர்ந்து சாலைகள் மூடப்பட்டு உள்ளன. விமான சேவை பாதிக்கப்பட்டது.

டெக்சாஸ், சிகாகோ, நியூயார்க், ஓஹியோ பகுதிகளில் கடும் குளிரால் மக்கள் அவதியடைந்தனர். இதனால், அமெரிக்காவில் 20 கோடி பேருக்கு எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. வெப்பநிலை மைனஸ் 48 டிகிரி செல்சியஸ் அளவிற்கு கீழ் சென்றுள்ளது. குளிர்காற்றும் வீசி வருகிறது. அமெரிக்காவில் கிறிஸ்மஸ் பண்டிகைக்குத் தயாரான மக்கள் பலர் விடுமுறை கொண்டாட்டங்களை ரத்து செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். கனடாவின் டொராண்டோ நகரிலும் கடும் குளிரால் விடுமுறைக்கான ஷொப்பிங் செல்வது குறைந்து விட்டது. அமெரிக்காவின் நியூயோர்க், சிகாகோ மற்றும் சியாட்டில் சர்வதேச விமான நிலையங்கள் உள்பட விமான சேவை பாதிக்கப்பட்டு 5 ஆயிரம் அமெரிக்க விமானங்கள் நேற்று ரத்து செய்யப்பட்டும், 7,600 விமானங்கள் காலதாமதத்துடன் இயக்கப்பட்டும் உள்ளன. சாலைகள் பனிச்சறுக்கு போட்டியில் செல்வது போன்று பனி படர்ந்து காணப்படுகின்றன. இதனால், வாகன போக்குவரத்தும் பாதிப்படைந்து உள்ளது. இதனையொட்டி மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத சூழல் காணப்படுகிறது. அமெரிக்காவில் குளிர்கால புயலால் 15 லட்சம் பேருக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டு, விடுமுறை கொண்டாட்டங்கள் ரத்து செய்யப் பட்டு உள்ளன.

மொத்தத்தில் கொரோனா பெருந்தொற்றால் 2 ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட் டங்கள் இந்த ஆண்டும் களைகட்டாமல் போயுள்ளன என மக்கள் வேதனையுடன் கூறுகின்றனர்.

## பாரிஸ் சூட்டில் மூவர் உயிரிழப்பு



பாரிஸ்,டிச.24

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் குர்திஷ் கலாச்சார மையத்தை குறிவைத்து நேற்றுத் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதில் 3 பேர் கொல்லப்பட்டனர். 3 பேர் காயமடைந்தனர். துப்பாக்கி சூடு நடத்தியவர் என்ற சந்தேகத்தின்பேரில் 69 வயது முதியவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். கைது செய்யப்பட்டவர் ஏற்கனவே குற்ற வழக்கில் சிக்கி உள்ளார். கூடாரங்களில் வசிக்கும் புலம்பெயர்ந்தவர்களைத் தாக்கியமைக்காக கைது செய்யப்பட்டிருக்கிறார். எனவே இனவெறி காரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணை நடைபெறுகிறது. கிறிஸ்துமஸ் பண்டிகை நெருங்கி வரும் நிலையில், மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## அல்கொய்தா தலைவர் அல் ஜவாஹிரி இன்னமும் உயிருடன் இருக்கிறாரா?

### வீடியோ வெளியாகிப் பரபரப்பு



ஆப்கானிஸ்தானில் ஆளில்லா விமானத் தாக்குதலில் அல் - கொய்தாவின் தலைவர் அய்மன் அ-ஜவாஹிரி கொல்லப்பட்டார் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடந்த ஜூலை மாதம் அறிவித்து இருந்தார். எனினும் அவர் இப்போது உயிருடன் இருக்கின்றாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அமெரிக்காவின் இரட்டை கோபுர தாக்குதலுக்கு முக்கிய மூளையாகச் செயல்பட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டு வந்த அய்மான் அல் ஜவாஹிரி கடந்த ஜூலை மாதம் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டார் என அறிவிக்கப்பட்டது. காபூலில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் அல் ஜவாஹிரி கொல்லப்பட்டார் என்று அமெரிக்கா கூறி வந்தது. இந்த தகவலை அமெரிக்க ஜோ பைடன் கூட உறுதிப்படுத்தியிருந்தார். அய்மான் அல் ஜவாஹிரி கொல்லப்பட்டு கிட்டதட்ட 6 மாதங்கள் ஆகியுள்ள நிலையில் திடீரென அல் ஜவாஹிரி இடம் பெற்றிருக்கும் வீடியோ ஒன்றை அல்கொய்தா அமைப்பு வெளியிட்டது. எனினும், இந்த வீடியோ எப்போது பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# காங்கிரஸ் கூட்டணியில் கமலின் மக்கள் நீதி மய்யம்

சென்னை,டிச.24

நாடளுமன்ற தேர்தலை எதிர்கொள்வதற்கான வியூகங்களை ஒவ்வொரு கட்சியும் வகுக்க தொடங்கி விட்டன. தமிழ்நாட்டில் தேசிய கட்சிகளான காங்கிரஸ் – தி.மு.க. கூட்டணியிலும், பா.ஜனதா அ.தி.மு.க. கூட்டணியிலும் இடம் பெற்றுள்ளன. தி.மு.க.–காங்கிரஸ் கூட்டணி தொடரும் என்றே இரு கட்சி தலைவர்களும் கூறி வருகிறார்கள். பா.ஜனதாவை எதிர்க்கும் எல்லா கட்சிகளுமே இந்த கூட்டணியில் இடம் பெறவே விரும்புகின்றன.

கமலின் மக்கள் நீதிமய்யம் கட்சி இந்த தேர்தலில் கூட்டணி என்ற முடிவுக்கு வந்து விட்டது. சமீபத்தில் அந்த கட்சியின் நிர்வாகிகள் கூட்டம் அண்ணா நகரில் நடந்தது. இந்த கூட்டத்துக்கு பிறகு நிருபர்களுக்கு பேட்டியளித்த கமலிடம் கூட்டணி பற்றி கேட்டபோது, கூட்டணி தொடர்பாக நாங்கள் எந்த திசையில் பயணிக்கிறோம் என்பதை என் பயணத்தை தெரிந்து கொண்டாலே உங்களுக்கு புரிய வரும் என்று கூறினார்.

இந்த நிலையில் தனது கட்சியை சேர்ந்த 250 பேருடன் இன்று டெல்லியில் ராகுல் நடைபயணத்தில்



கலந்து கொண்டார். ராகுல் அழைப்பின் பேரில் கமல் கலந்து கொண்டாலும் இது அரசியல் கூட்டணிக்கான அச்சாரமாகவே கருதப்படுகிறது.

ஏனெனில் பா.ஜனதாவுக்கு எதிராக வலிமையான மெகா கூட்டணி அமைக்கவே தி.மு.க. விரும்புகிறது. அந்த வகையில் 2 சதவீதம் வாக்கு வங்கியை கொண்டுள்ள கமல் கட்சியும் தங்கள் பக்கம் வர வேண்டும் என்று தி.மு.க. விரும்புகிறது. அதன் அடிப்படையில் தான் இந்த அழைப்பு பின்னணியும் இருப்பதாக கூறப்படுகிறது. பா.ஜனதாவை விட காங்கிரஸ் மத்தியில் ஆட்சிக்கு வருவதையே கமல் விரும்புகிறார். எனவே காங்கிரஸ் அணியில் இடம் பிடிக்கவே இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டதாக கூறப்படுகிறது. கூட்டணி உறுதியாகி விட்டதாகவும் தொகுதி பங்கீடுதான் யோசிக்கப்படுவதாகவும் கட்சியினர் பேசிக் கொள்கிறார்கள். குறைந்தது 2 தொகுதிகளும் ஒரு மேல்சபை இடமும் வேண்டும் என்று கமல் தரப்பு வலியுறுத்துவதாகவும், ஆனால் ஒரு தொகுதி, ஒரு மேல்சபை பதவி தரலாம் என்று கூறி இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. கடந்த எம்.எல்.ஏ. தேர்தலில் பா.ஜனதாவை எதிர்த்து கமல் ஹாசன் போட்டியிட்டார். அந்த தேர்தலில் பா.ஜனதா வேட்பாளரிடம் தோல்வி அடைந்தார். இருப்பினும் வருகிற நாடாளுமன்றத் தேர்தலிலும் தென் சென்னை அல்லது கோவையில் போட்டியிடவே அவர் விரும்புகிறாராம்.

## பீகாரில் செங்கல் சூளையில் நேர்ந்த வெடிவிபத்தில் 9 தொழிலாளர் சாவு!

### பிரதமர் மோடி இரங்கல் தெரிவிப்பு



மோதிஹரி,டிச.24

பீகாரில் செங்கல் சூளையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்து உள்ளது.

பீகாரின் கிழக்கு சாம்பரான் மாவட்டத்தில் மோதிஹரி நகரில் ராம்கார்வா கிராமத்தில் நாரிர்கீர் பகுதியில் செங்கல் சூளை ஒன்று செயல்பட்டு வருகிறது. இதில், தொழிலாளர்கள் பலர் பணியாற்றி வந்துள்ளனர். இந்நிலையில், செங்கல் சூளையின் புகைக்கூண்டு திடீரென நேற்று மாலை வெடித்து சிதறியுள்ளது. இதில் தொழிலாளர்கள் பலர் சிக்கி கொண்டனர். இதுபற்றி தகவல் அறிந்ததும் பொலிஸ் குழு மற்றும் மாநில பேரிடம் மீட்பு படையினர் சம்பவ பகுதிக்கு உடனடியாக சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். எனினும், வெடிவிபத்தில் சிக்கி 7 தொழிலாளர்கள் உயிரிழந்து உள்ளனர் என முதல் கட்ட தகவல் தெரிவித்தது. பலர் காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். நேற்று மாலை மீட்பு பணி ஒத்தி வைக்கப்பட்டது. இதன்பின் இன்று காலை தொடர்ந்து மீட்பு பணி நடந்தது. இந்த நிலையில், வெடிவிபத்தில் பலி எண்ணிக்கை 9 ஆக உயர்ந்து உள்ளது.

10 பேர் வரை காயமடைந்து உள்ளனர். அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்ததுடன், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.2 லட்சமும், காயமடைந்த நபர்களுக்கு ரூ.50 ஆயிரமும் இழப்பீடு வழங்கப்படும் என அறிவித்து உள்ளார். இதேபோன்று, பீகார் முதல்–மந்திரி நிதீஷ் குமார் இரங்கல் தெரிவித்து உள்ளார்.

## சீனா உட்பட 5 நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வருவோர் மீது கட்டாய கொரோனா பரிசோதனை

புதுடெல்லி, டிச.24

சீனா, ஜப்பான், தென் கொரியா, ஹாங்காங், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இந்தியா வரும் பயணிகளுக்கு கொரோனா பரிசோதனை கட்டாயம் என மத்திய சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, சீனா, ஜப்பான், தென் கொரியா, ஹாங்காங், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இந்தியா வரும் பயணிகள் RT-PCR எனப்படும் கொரோனா பரிசோதனையை கட்டாயம் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். பரிசோதனையில் கொரோனா அறிகுறிகள் இருப்பது தெரியவந்தால், அவர்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

### ஏர் சுவிதா சான்றிதழ் கட்டாயம்

இதனிடையே, சீனா, ஜப்பான், தென் கொரியா, ஹாங்காங், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இந்தியா வரும் பயணிகள், தங்களின் உடல்நிலை குறித்து தாங்களே சான்றளிக்கும் ஏர் சுவிதா விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அளிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதில், அவர்களின் தனிப்பட்ட விவரங்கள், தொடர்பு எண்கள், சமீபத்தில் மேற்கொண்ட பயண விவரங்கள், உடல்நிலை குறித்த விவரங்கள் ஆகியவற்றை தெரிவிக்க வேண்டும். இந்தியா வரும் வெளிநாட்டுப் பணிகளால் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தல்

கொரோனா தொற்று நோயாளிகளுக்குத் தேவைப்படும் மருத்துவ ஆக்ஸிஜன் வாயு போதுமான அளவு இருப்பு இருப்பதை உறுதிப்படுத்துமாறு அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச சுகாதாரத்துறைகளுக்கு, மத்திய சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது. இது தொடர்பாக அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச சுகாதாரத்துறைகளுக்கு மத்திய சுகாதாரத்துறை கூடுதல் செயலாளர் மனோகர் அக்னானி இன்று கடிதம் எழுதி உள்ளார். அதில், கொரோனா நோயாளிகளுக்கு அத்தியாவசியத் தேவையாக மருத்துவ ஆக்ஸிஜன் இருப்பதால், அவற்றின் இருப்பு போதுமான அளவு இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும் என்றும், அவற்றின் விநியோக நடைமுறை சரியாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தி உள்ளார்.



# அறநெறி மாணவர்களுக்கு திருமலையில் பரிசளிப்பு



(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த இந்து சமய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் போட்டியில் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

நற்பண்பு மிக்க சமுதாயமொன்றை கட்டியெழுப்ப அறநெறிப்பாடசாலைகள் வழிசமைக்கின்றன. அத்துடன் அறநெறிப்பாடசாலைகள் மாணவ சமூகத்தை நல்ல பண்புடையவர்களாக மாற்றும் நோக்கில் அளப்பரிய சேவைகளை வழங்குகின்றன. தற்போதைய காலத்தில் மாணவர்கள், அறநெறி மாணவர்களை மையமாக கொண்டு பல விரும்பத்தகாத செயற்பாடுகள் சூட்சுமமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் இவற்றிலிருந்து மாணவர்களை பாதுகாக்க அறநெறி ஆசிரியர்களும் தமது வகிபாகத்தை சரியாக வழங்க வேண்டும் என இதன்போது அரசாங்க அதிபர் வேண்டிக்கொண்டார்.

அறநெறி பல்துறைசார் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில்கள் அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் திருகோணமலை சிறீபத்திரகாளி தேவஸ்தானத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ கலைமாமணி சோ.ரவிச்சந்திர குருக்கள், தென்கைலை ஆதீனம் தவத்திரு அகஸ்த்தியர் அடிகளார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டு ஆசியுரைகளை வழங்கினர்.

மாவட்ட அரசாங்க அதிபரின் சேவையை பாராட்டும் முகமாக அவருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அரசாங்க அதிபருக்கு புத்தபெருமானின் உருவச்சிலையும் கையளிக்கப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ். பரமேஸ்வரன், தம்பலகாமம் உதவி பிரதேச செயலாளர், மாவட்ட செயலக இந்து சமய கலாசார உத்தியோகத்தர் இலக்குமிதேவி சிறீதரன், அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இதற்கான அனுசரணையை வழங்கிருந்தது.

# கல்முனை சேனைக்குடியிருப்பில் 'நாவலர் வீதி' பெயர் சூட்டப்பட்டது



(காரைதீவு செய்தியாளர்)

இலங்கை அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டின் செயற்திட்டங்களில் ஒன்றான நாவலர் வீதி பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்து வைத்தல் நிகழ்வு நேற்று முன்தினம் கல்முனை சேனைக்குடியிருப்பில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் கே.செல்வராஜாவின் ஏற்பாட்டில் நாவலர் வீதி பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்து திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வின் தலைவர் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஏ.ஜே.அதிசயராஜ்,புகழ்பெற்ற ஓவியர் மு.பத்மவாசன், ஓய்வு நிலை பொறியியலாளர் த.சர்வானந்தா, கல்முனை மாநகர சபை உறுப்பினர் கே. செல்வராஜா ஆகியோர் நாடாவை இழுத்து திரைநீக்கம் செய்து வைத்தார்கள்.

ஆன்மீக ஆர்வலர் உதவிக்கல்விப்பணிப்பாளர் வீ.ரி. சகாதேவராஜா, பாடசாலை அதிபர் பொன்.கமலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர்களான கு.ஜெயராஜி, ந.பிரதாப், கலாச்சார உத்தியோகத்தர் திருமதி கே.சுஜித்ரா, திருமதி பா.சுஜீவனி ஆகியோரின் நெறிப்படுத்தலில் நிகழ்வு இடம்பெற்றது. இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக் களம் அடுத்த ஆண்டை (2023) நாவலர் ஆண்டாக ஜனாதிபதி முன்னிலையில் பிரகடனப் படுத்தி இருந்தது .

அந்த நாவலர் ஆண்டின் 17 செயற்றிட்டங்களில் ஒன்றான வீதி ஒன்றிற்கு 'நாவலர் வீதி' பெயர் சூட்டலும் திறப்பும் மற்றும் குருபூஜ. ஆகியன கோலாகலமாக நடந்ததமை வாயிலாக இலங்கையில் முதன்முதலாக வடக்கில் நல்லூரில் பிறந்த நாவலர் பெருமானுக்கு கிழக்கில் காரைதீவில் பிறந்த விபுலானந்த அடிகளாரின் கோட்டையில் முதல் கௌரவம் வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாவிதன்வெளி கிட்டங்கி ஆற்றில்

# முதலை இழுத்துச் சென்ற இளைஞரைக் காணோம்



(பாறுக் ஷிஹான்)

மாடுகளை மேய்ப்பதற்காக கிட்டங்கி ஆற்றில் இறங்கிய இளைஞனை முதலை இழுத்து சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி கல்முனை பகுதியை இணைக்கின்ற கிட்டங்கி வாவி பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது மாடுகள் கிட்டங்கி வாவியில் இறங்கி நிற்பதாக நண்பன் தெரிவித்ததற்கமைய குறித்த இளைஞன் மாடுகளை கரையேற்றுவதற்காக வாவியினுள் இறங்கிய நிலையில் முதலை பிடித்து இழுத்து சென்றுள்ளது.

இவ்வாறு முதலை பிடியினால் காணாமல் போனவர் சேனைக்குடியிருப்பு 1 பிரிவு 157 விக்னேஸ்வரன் வீதியை சேர்ந்த சுகிர் பிரதாஸ் (வயது-30) என்பவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. பொதுமக்களுடன் கடற்படையினர் பொலிஸார் இணைந்து தேடுதலை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகின்றது. முதலைகளின் பெருக்கம் சம்பந்தமாக உரிய இடங்களில் அறிவுறுத்துதல்கள், எச்சரிக்கை பலகைகள் இதுவரையும் வைக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரியவில்லை. முதலை அபாயம் தெரியாமல் இப்பகுதியில் மக்கள் இறங்குவதால் முதலையின் பிடிக்குள் அகப்படும் சாத்தியம் உள்ளது. இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

# மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மூச்சு செயற்றிட்டத்தின் கீழ் 39 லட்சம் ரூபா பெறுமதியான இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு போதனா வைத்யதியசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி.க.கலாறஞ்சினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸா பிரதம அதிதியாக கலந்துகொண்டு இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரத்தை வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீரலி, முன்னாள் பிரதியமைச்சர் சோ.கணேசமூர்த்தி மற்றும் வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.



# தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு அரசு தேர்தலை பிற்போடுமாறு கடுமையான அழுத்தம்



## நாலக கொடஹேவா சாடல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுமாறு அரசாங்கம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கடும் அழுத்தம் பிரயோகித்துள்ளது.

தேர்தலை பிற்போட முடியாது. வேண்டுமாயின் நாடாளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு ஆணைக்குழு அரசாங்கத்திடம் அறிவித்து விட்டது. தேர்தலை பிற்போட ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸ் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

கடன் பெற்று பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணலாம் என்பது ஜனாதிபதியின் பிரதான பொருளாதாரக் கொள்கையாக உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை அமுல்படுத்துவதால் சமூகக் கட்டமைப்பு எதிர்கொள்ளும் மிக மோசமான பாதிப்புகள் தொடர்பில் ஜனாதிபதி உட்பட அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுமாறு அரசாங்கம் தேசிய தேர்தல் ஆணைக்குழுவிற்கு கடும் அழுத்தம் பிரயோகித்து வருவதாக அறிய முடிகிறது. தற்போதைய நிலைமைக்கு அமைய தேர்தலை பிற்போட முடியாது. நடைமுறை சட்டத்துக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை பிற்போட வேண்டுமாயின் நாடாளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் தேர்தலை பிற்போட அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவிற்கும் மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை உள்ளது, ஏனெனில் இரு தரப்பினரும் மக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். தேர்தல் விடயத்தில் நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும்.

நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்ற ஐக்கிய தேசியக் கட்சியினரும், பொதுஜன பெரமுனவினரும் தற்போது ஒன்றிணைந்துள்ளார்கள். ஆகவே, இவ்விரு தரப்பினரும் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிடுவது சிறந்தது, பொருளாதாரப் படுகொலையாளிகளுக்கு ஜனநாயக ரீதியில் சரியான பாடம் கற்பிக்க முடியும்.

2020 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு நேர்ந்த கதியே தமக்கும் ஏற்படும் என்பதால் பொதுஜன பெரமுன உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஜனாதிபதியின் ஆசிர்வாதத்துடன் பிற்போட பாரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. நாட்டு மக்கள் அரசியல் ரீதியான தமது நிலைப்பாட்டை தேர்தல் ஊடாக மாத்திரமே வெளிப்படுத்த முடியும். மக்களின் அடிப்படை உரிமையை நிச்சயம் பாதுகாப்போம். தேர்தலை பிற்போட ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். – என்றார்.

# மின்கட்டண உயர்வுக்கு எதிராகப் போராட்டம்!

மின்சார கட்டண அதிகரிப்பு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கொழும்பு – கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று(வெள்ளிக்கிழமை) இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அனைத்து தொழிற்சங்கத் தலைவர்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்ததுடன், மின் கட்டண அதிரிப்பை எதிர்த்து பொது மக்களிடம் கையெழுத்தும் பெறும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# 28 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது!



யூரியா உரத்தை ஏற்றிச் சென்ற கப்பல் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

மேற்படி கப்பலில் 28 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வீதியில் கிடந்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்த ஊர்காவற்றுறைப் பொலிஸார்!

## குவியும் பாராட்டுக்கள்





ஊறுகாவற்துறை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி விதானபத்திரன உட்பட்ட, பொலிஸ் உத்தியோகத்தர்கள் வியாழக்கிழமை இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது வீதியில் பணப்பை ஒன்று இருப்பமை அவதானித்தனர்.

மேற்படி பையை எடுத்துப் பார்த்தவேளை அதனுள் 35 ஆயிரம் ரூபா பணம், தங்க ஆபரணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன காணப்பட்டன.

அந்தப் பணப்பை ஊர்காவற்துறை பகுதியில் வசிக்கும் கிறிஸ்தவ மதகுரு ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டது.

இது தொடர்பாக அந்த மதகுருவுக்கு தகவல் வழங்கப்பட்டது. இந்நிலையில் நேற்று (வெள்ளிக் கிழமை) பொலிஸ் நிலையத்திற்கு வந்த மதகுரு தனது பையைப் பெற்றுக்கொண்டு பொலிஸாருக்கு நன்றி தெரிவித்துச் சென்றார். ஊர்காவற்துறை பொலிஸாரின் இந்த முன்மாதிரியான செயற்பாட்டை அனைவரும் பாராட்டி வருகின்றனர்.

# யாழ். வட்டு இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஆறுமுகநாவலரின் 200 ஆவது பிறந்த தினம்!







யாழ். வட்டு இந்துக் கல்லூரியும் சங்கானைக் கல்விக்கோட்டமும் சங்கானை பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் இருநூறாவது பிறந்ததின நிகழ்வு நேற்று (வெள்ளிக் கிழமை) பி.ப 2 மணியளவில், யாழ். வட்டு இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப்புலவர் அரங்கத்தில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் அதிபர் அ.ஆனந்தராஜா தலைமை தாங்கிய இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீமன் ராகேஷ் நட்ராஜ் கலந்துகொண்டார்.

கலை கலாசார முறைப்படி தவில் நாதஸ்வரம் இசைக்க பொம்மலாட்டத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் விருந்தினர்களின் உரைகள், பரிசில்கள் வழங்கல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தினர், சங்கானை கோட்டக் கல்வி அலுவலகத்தினர், சங்கானை பிரதேச செயலகத்தினர், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், தமிழ் அறிஞர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பயங்கரவாத ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்,

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்தம் செய்வது காலம் காலமாக காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்காது என்பதால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்து அதற்குப் பதிலாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தை இயற்ற ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின்புள்ளே, ஜனாதிபதி சட்டத்தரணி நளிந்த இந்திர திஸ்ஸ ஆகியோரின் இணைத் தலைமைத்துவத்தில் தேசிய பாதுகாப்பு சட்டமூல உருவாக்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்புச் சட்டமூலத்தை எதிர்வரும் 31ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்யுமாறு நாடளாவிய ரீதியில் எதிர்ப்புக்கள் நாளாந்தம் வலுப்பெற்ற நிலையில் உள்ளன – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.12.2022 இல் வெளியிடப்பெற்றது.